# நடப்பு நிகழ்வுகள்- ஜனவரி 27 - 2017

- "Barbarian Days : A life" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - வில்லியம் ஃபின்னிகான் (William Finnergan).
- "You Got Magic" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - நீல் மாதவ்.
- கமலேஷ் சுப்பிரமணியம் எழுதி ஐ.ஏ.எஸ் அதிகாரி இறையன்பு முன்னுறை எழுதியுள்ள 'feather in a C.A.P' என்ற புத்தகம் ஜனவரி 29-ம் தேதி வெளியிடப்படுகிறது.
- தமிழகத்தில் அனைத்து தலைமை மருத்துவமனைகள் , மாவட்ட மருத்துவமனைகளில் பயோமெட்ரிக் வருகைப்பதிவு முறையை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ அரசுக்கு மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.
- அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'தி அமெரிக்கன் இன்ரஸ்ட்' பத்திரிக்கை உலகின் சக்தி வாய்ந்த முதல் 8 நாடுகளின் பட்டியலில் இந்தியா 6 – வது இடத்தைப் பிடித்துள்ளது.
- அமெரிக்கா – மெக்சிகோ எல்லையில் மாபெரும் பாதுகாப்பு சுவர் எழுப்பும் உக்கரவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.
- கர்நாடக லோக் ஆயக்தா புதிய நீதிபதியாக பி.விஸ்வநாத் ஷெட்டியை நியமிக்க கவர்னர் வஜீபாய் வாலா ஒப்புதல் அளித்து உள்ளார்.
- மாசி சடையப்பன் மற்றும் வடிவேல் கோபால் ஆகிய இருவர்கள் அமெரிக்காவின் புளோரிடோ பல்கலைக்கழக வனவிலங்கு உயிரின ஆய்வாளர் பிராங்க் மஷோட்டி தலைமையிலான குழுவினருக்ககு மலைப்பாம்பு பிடிக்கும் பயிற்சி அளித்து வருகின்றனர்.
- மாரத்தான் ஓட்டத்தின்போது கூவத்தில் விழுந்த மாணவியைக் காப்பாற்றிய சக மாணவி வி.துர்கா தேவிக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பாதக்கத்தை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வழங்கினார்.
- பாலியல் குற்றச்சாட்டையடுத்து மேகாலய மாநில ஆளுநர் வி.சண்முகநாதன் (67) தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- நாட்டின் மிகச் சிறந்த தொழில் வளர்பகத்திற்கான தேசிய விருது திருச்சியில் உள்ள டிரெக்ஸ் டெப் நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது.

- தமிழகத்தில் டிசம்பர் - 31 ஆம் தேதி நிலவரப்படி அரசு வேலைக்காக பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 81.3 லட்சமாகும்.
- 2000 கிலோ எடைகொண்ட வெடிப்பொருட்களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட ஆளில்லா போர் விமானம் The sharp sword UAV ஐ சீனா அறிமுகம் செய்துள்ளது.
- புது தில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பங்கேற்ற அருணாச்சல பிரதேசத்தின் அலங்கார ஊர்திக்கு முதல் பரிசும், கிடைத்துள்ளது. திரிபுரா மாநில ஊர்திக்கு இரண்டாவது பரிசும் , தமிழ்நாட்டுக்கும் மகாராஷ்டிராவுக்கும் மூன்றாவது பரிசும் கிடைத்துள்ளது.
- தமிழகத்தின் ஜல்லிக்கட்டைப்போலவே நீதிமன்ற உத்தரவால் தடைசெய்யப்பட்டுள்ள கர்நாடகத்தின் பாரம்பரியமான “கம்ளா” எனப்படும் எருமைப் பந்தய விளையாட்டுக்கு அனுமதி அளிக்க கோரி பெங்களூருவில் போராட்டம் நடைபெற்று வருகிறது.
- இந்தியாவில் இதுவரை 111 கோடி பேருக்கு ஆதார் எண் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் 99 சதவீத இளையோர்கள் ஆதார் எண் பெற்றுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நிர்பயா நிதித் தொகுப்பில் இருந்து பெண்களின் பாதுகாப்புக்கான திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 16 சதவீதம் மட்டுமே பயன்படுத்தபடபட்டு உள்ளதாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்தியாவிற்கான ரஷியநாட்டு தூதர் அலெக்சாண்டர் கடாகின் உடல்நலக் குறைவு காரணமாக தில்லியில் உள்ள மருத்துமனையில் 26.01.17 அன்று காலமானார். இவர் கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வந்தார்.
- முத்திய பிரதேசத்தில் பாலிதீன் பைகளுக்கு மே 1 ம் தேதி முதல் தடைவிதிக்கப்படும் என்று அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் அறிவித்துள்ளார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உத்தம் தில்லனுக்கு அமெரிக்க அதிபரின் சட்ட ஆலோசனைக் குழவில் முக்கியப் பதவி அளித்து அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.